Registered as a newspaper

விலை - ரூபா.7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கம் - 12

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை - 11 | 27-11-2003 | வியாழக்கிழமை | ஓசை 282




# தென்னிலங்கையில் உறுதியான தலைமை உருவாகும் வரையில் காத்திருக்கிறோம்

## பூக்கும் நம்பிக்கை பூ

மாரிமழை பொழியும்
மண்கசியும்; ஊர்முழுதும்
வாரியடித்து வெள்ளம் வான்பாயும்;
கார்த்திகையில்
பூமி சிலிர்த்துப்போய் பேறடையும்.
துயிலுமில்லச்
சாமிகளுக்கான 'சந்தனநாள்' வந்தடையும்.
மாவீரச் செல்வங்கள் மண் கிழித்து வெளிவந்து
சாவீரச்செய்தி சாற்றி உறவுரைத்து
பேசும் நாள்.
விழியில் பொலபொலன்று நீர்த்தாரை
வீசும்நாள்; தமிழீழம் விடியும் என நம்பி
பாடும்நாள் விதைத்த பயிர்கள் நிமிர்ந்தழகாய்
கூடும் நாள்;
தமிழர் குலம் குதிக்கும் நாளிதுதான்.
குன்றின் குரல் நடுங்கி குற்றேவல் செய்தஇனம்
இன்றிந்த நிமிர்வுக்கு இட்டமுதல் "விதைப்பு"
சாவைக்கொடுத்தேனும் தமிழ்வாழ்வு
எனநிமிர்ந்து
பேசும்படியான புதுவாழ்வின் "புலர்வுதினம்"
வருடம் ஒருநாளே வரும்
வரவேற்போம்.
இருளகற்றி வாசல் ஏற்றும் சுடர்விளக்கில்
பொலிவுபெறும் ஊர்கள்.
புனிதர்களின் துயிலுமில்லம்
விழிசொரியும் உறவுகளால் விளங்கும்.
உள்ளுறங்கும்
பிள்ளைகளின் வாய்கள் பேசுவது காதுவிழும்,
பள்ளிகொள்வோர் எம்மைப் பார்ப்பதையும்
விழியுணரும்.
நாமழுதால் சிரிக்குமொலி நாற்திசையும்
எதிரொலிக்கும்.
தாயழுதால் அம்மா தளராதே எனுமொற்றைச்
சொல்லே துயிலுமில்லச் சூழலிலே கேட்டிருக்கும்.
பூச்சொரிந்து,
நெய்விளக்கில் பொறியேற்றி,
விழிசொரிந்து,
கார்த்திகையில் அந்நாள் கலங்கி
வெளியில்வர
பூத்திருக்கும் நம்பிக்கைப் பூ.

— புதுவை இரத்தினதுரை —


## சமாதான முயற்சிகள் முன்னெடுப்புக் குறித்து தேசியத் தலைவர் கிறிஸ் பெட்டனுக்கு விபரிப்பு

(கிளிநொச்சி)

நாங்கள் மிகவும் நிதானமாகத் தென்னிலங்கை அரசியல் நிலைப்பாடு பற்றி அவதானித்துக் கொண்டிருக்கிறோம். அங்கு ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிகள் முடிவுக்கு வந்து, அரசியல் உறுதிப்பாடு ஏற்பட்டு, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கக்கூடிய சகல அதிகாரங்களும் பொருந்திய அரசியல் தலைமை உருவாகும் வரை நாங்கள் பொறுமையாக இருக்கின்றோம் என தம்மை சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளரிடம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் கிறிஸ்பெட்டன் நேற்றுத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலை நடத்தியது குறித்துக் கருத்துக் கூறும்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்

(2ஆம் பக்கம் பார்க்க)



## விசேட பேருந்து சேவை!

தமிழீழப் போக்குவரவுக்கழகம் இன்று விசேட பேருந்து சேவைகளை நடத்துகின்றது. முல் லைத்தீவு - முகமாலை, முல்லைத்

(11ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக கடந்த திங்கட்கிழமை போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

மேஜர் சோதிமுகன்

(11ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் நினைவுரையுடன் இன்றுமாலை நிகழ்வுகள் ஆரம்பம்

உணர்வெழுச்சியுடன் தமிழர் தாயகப் பகுதியில் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் நாளின் மாலை நிகழ்வுகள் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரையுடன் ஆரம்பமாகும்.

இந்நினைவுரை நிறைவடைந்ததும் உடனடியாக 6.05மணிக்கு அனைத்து வழிபாட்டிடலயங்களிலும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பப்படும். இதனையடுத்து 6.06மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி நேரம் அகவணக்கம் செலுத்தப்படும். இதனையடுத்து 6.07 மணிக்கு மாவீரர் துயிலுமில்லங்கள், மக்கள் குடியிருப்புகள், பொது இடங்கள்,

(11ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் நவம்பர்-27

இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக்கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# தலைவரின் பிறந்தநாளையொட்டி மக்கள் மகிழ்ச்சிப் பரிமாற்றம்

## - இனிப்புப் பண்டங்களும் வழங்கப்பட்டன

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 49ஆவது பிறந்தநாளை நேற்றுத் தமிழீழ மக்கள் இனிப்புப் பண்டங்கள் வழங்கிக் கொண்டாடினர்.

தமிழீழத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழீழ மக்கள் தத்தமது நண்பர்கள் உறவினர்களுடன் மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்.

தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனது பிறந்ததின நிகழ்வு மகிழ்ச்சி பூர்வமாக நேற்று குடாநாட்டில் பொது அமைப்புகளால் கொண்டாடப்பட்டது.

பலாலி வீதியின் பரமேஸ்வராச்சந்திப் பகுதியினூடாகப் பயணிப் போருக்கு இனிப்புகளை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கினர். குறிப்பாக இவ் வீதியினூடாகப் பயணித்த படையினரது வாகனங்கள் மறிக்கப்பட்டு அதில் பயணஞ் செய்த படையினருக்கு இனிப்புப் பொட்டலங்களும், தேசியத் தலைவரது வர்ணப் படங்களும் மாணவர்களால் விநியோகிக்கப்பட்டன.

இதேவேளை வடமராட்சி வடக்கின் இன்பருட்டி கரையோரக் கிராமத்தில் "இன்பருட்டி இந்து இளைஞர்" அமைப்பின் ஏற்பாட்டில் பொது மக்களிற்கு கேக் விநியோகிக்கப்பட்டது.

முன்னதாக தமிழீழ வரைபடவடிவில் உருவாக்கப்பட்டிருந்த இக் 'கேக்'மக்களது பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. குறிப்பாக கடற்கரை வீதியூடாகப் பயணித்த பொது மக்களிற்கு பலமணி நேரமாக இக் கேக் வெட்டி வழங்கப்பட்டது.

# தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு மாணவருக்கு பாதணி அன்பளிப்பு

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழ சுகாதார சேவை இணைந்து பூநகரி நல்லூர் ம.வி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைக்கான பாதணி வழங்கும் நிகழ்வு 26.11.2003 பாடசாலை அதிபர் கணேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கினை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை அபிவிருத்தி நிதித்திட்ட மலேசியா தலைவிமருத்துவ கலாநிதி, பிரதேசப் பொறுப்பாளர் பாலாஜி ஆகியோர் ஏற்றினர்.

இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவை பணிப்பாளர் அருள், தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையைச் சேர்ந்த தமிழ்வாணன், பூரணி ஆகியோரும், தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரி யன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதணி வழங்கும் நிகழ்வை மருத்துவ கலாநிதி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரையினை தமிழீழ சுகாதார சேவை பணிப்பாளர் அருள், தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் ஆகியோர் ஆற்றினர்.

### தலைவரின் பிறந்தநாளையொட்டி

# திலீபன் மருத்துவ சேவையினருக்கு அம்புலன்ஸ் வண்டி அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் பிறந்ததினத்தை முன்னிட்டு முதலாம் வட்டாரம் வேலணை கிழக்கைச் சேர்ந்த இராமலிங்கம்.சம்மந்தன் என்பவர் அம்புலன்ஸ் வண்டி ஒன்றை ஐயன்குளம் திலீபன் மருத்துவ சேவைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

நேற்றுமாலை கிளிநொச்சியில் வைத்து அம்புலன்ஸ் வண்டியை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களிடம் கையளித்துள்ளார்.

நீண்டகாலமாக மருத்துவ வசதிகள் எதுவுமின்றி பெரும் துன்பங்களின் மத்தியில் வாழ்ந்து வந்த இப்பகுதி மக்களுக்கு திலீபன் மருத்துவ சேவையினர் சேவை புரிந்து வருகின்றனர். இப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் அவசர மருத்துவ தேவையைக் கருத்திற் கொண்டு இவ் அம்புலன்ஸ் வண்டி கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி மக்களிற்கு நீண்டகாலமாக இருந்து வந்த தேவை பூர்த்தி செய்யப்பட்டமையால் இம் மக்களின் அனாவசியமான உயிரிழப்புக்கள் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (லோ)

## தென்னிலங்...

துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றைய சந்திப்புக்குறித்து பத்திரிகையாளரிடம் பேசிய சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு அளித்த பதில்கள் வருமாறு.

**கேள்வி:-** இன்றைய சந்திப்பில் மிகவும் முக்கியமாக என்ன விடயங்கள் தொடர்பாகப் பேசப்பட்டது எனக் கூறமுடியுமா?

இன்று எமது தேசியத் தலைவர் ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளர் அவர்களைச் சந்தித்திருக்கிறார். இது மிகவும் நிறைவானதும், நம்பிக்கை தரக்கூடியதுமான சந்திப்பாக அமைந்தது.

இச்சந்திப்பில் மிகவும் முக்கியமாகப் பேசப்பட்ட விடயங்கள் தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் பற்றியும் இவ்வாறு அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளினால் சமாதானச் சூழ்நிலைகள் குழப்பமடைந்து ஒரு நெருக்கடிநிலை தோன்றக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான முயற்சிகள் சம்பந்தமான கருத்துக்களை அதிகளவில் அறிந்துகொள்வதே அவரது பயணத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அந்த அடிப்படையில் எங்களது தேசியத் தலைவர் அவர்கள் இன்றைய சூழ்நிலை சம்பந்தமாகவும் சமாதானப் பேச்சுக்களின் அவசியம் பற்றியும் அமைதி வழியில் பேச்சுக்களின் மூலமாக எமது மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் தீர்வை எட்டுவதற்கு எப்போதும் எங்களது அமைப்பு உறுதியாக இருக்கிறது என்பதையும் போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதிலும் நாம் மிகவும் உறுதியுடன் இருக்கின்றோம் என்பதையும் அவருக்கு மிகவும் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்.

**கேள்வி:-** ஐரோப்பிய யூனியன் வெளிவிவகார ஆணையாளரை இன்று சந்தித்திருக்கிறீர்கள் பிரிட்டனில் புலிகளைத் தடை செய்திருக்கிறார்கள். அந்த வகையில் புலிகள் மீதான தடையை நீக்குமாறு நீங்கள் அவர்களிடம் கேட்டீர்களா?

பொதுவாக நாங்கள் அதைப்பற்றிப் பேசவில்லை. ஏனெனில் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் எங்களையும், எங்களது தேசியத் தலைவரையும் சந்தித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஐரோப்பிய நாடுகள் எங்களது விடுதலை போராட்டம் சம்பந்தமாகவும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் சம்பந்தமாகவும் அவர்கள் கூடிய கரிசனை கொண்டிருக்கிறார்கள் என்பது இந்தச் சந்திப்புக்கள் மூலம் நாங்கள் அறியக்கூடியதாக உள்ளது. ஆகவே நாங்கள் தடை சம்பந்தமாக அவர்களுடன் எதுவுமே பேசவில்லை.

**கேள்வி:-** போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கு நிதி உதவி வழங்குவது சம்பந்தமாக ஏதாவது பேச்சு நடத்தினீர்களா?

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் நாம் முக்கியமாக முன்வைத்தது எங்களது மக்களின் அபிலாசைகள் என்ன என்பது பற்றியே. யுத்தநிறுத்த உடன்பாடு வந்து இன்று இருபத்தொரு மாதங்கள் கடந்து விட்டன. இந்த உடன்படிக்கையின் படி எதுவுமே இதுவரை நடைபெறவில்லை.

எமது மக்களின் இயல்பான வாழ்வு திரும்பவில்லை. இராணுவ நெருக்கடிகளும் கெடுபிடிகளும் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. மக்களின் வாழ்க்கை நிலையில் சுமுகநிலை ஏற்படவில்லை. எந்தவித அபிவிருத்திகளும் மேற்கொள்ளப் படவில்லை. இந்த யுத்தநிறுத்தத்தாலும் சமாதான முன்னெடுப்புக்களாலும் அதிக நன்மை பெற்றது சிங்களதேசமும் தென்பகுதியுமே. எங்களது தமிழர் தாயகப் பகுதியில் எந்த அபிவிருத்தியும், முன்றமும் ஏற்படவில்லை என்பதை இன்றைய சந்திப்பில் எமது தலைவர் தெளிவாக அவர்களிடம் விளக்கியிருந்தார்.

**கேள்வி:-** ஆம், நீங்கள் முன்வைத்த இத்தகைய கோரிக்கைகளுக்கு அவர்கள் என்ன பதிலளித்தனர்?

பொதுவாக தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி அரசியல் அதிகாரப் போட்டிகள் அதனால் இந்த சமாதான முயற்சிகள் குழப்பமடைந்து, மீண்டும் யுத்தம் வெடித்துவிடுமோ என்ற அச்சமும் அந்த நம்பிக்கையீனமுமே அவர்களின் மனதில் இருக்கின்றது. ஆகவே அவர்கள் இந்த தென்னிலங்கை அரசியல் நெருக்கடிக்கு விரைவில் ஒரு சுமுகமான சூழல் ஏற்பட்டு இங்கு சமாதான முயற்சிகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்பதுடன் வன்முறை யுத்தங்களைத் தவிர்த்துப் பேச்சுக்கள் மூலமாக அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்பது தான் சர்வதேச சமூகத்தினுடைய அபிப்பிராயமாக இருக்கிறது. இவருடைய இலங்கை விஜயத்தின் பொழுது தமிழீழ தேசியத் தலைவர் அவர்களையும் சந்தித்து சர்வதேச சமூகத்தினுடைய விருப்பங்களைத் தான் அவர் வெளிப்படுத்துவதாக இருந்தது.

**கேள்வி:-** உங்களைச் சந்திப்பதற்கு முன்னதாக சனாதிபதியைச் சந்தித்திருந்தார். அந்தச் சந்திப்புத் தொடர்பாக உங்களுடன் ஏதாவது பேசப்பட்டதா?

சனாதிபதியைச் சந்தித்தது சம்பந்தமாக எமக்குக் கூறப்பட்டது. அவரும் சமாதானத்தையும், பேச்சுக்கள் மூலமாக தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் தன்னிடம் வலியுறுத்தியிருந்ததாகவும் அவர் கூறினார். அவர்களுக்குள் ஏற்பட்ட அதிகார இழுபறிகள் பற்றியோ முரண்பாடுகள் பற்றியோ அவர் எம்மிடம் எதுவுமே தெளிவாகக் குறிப்பிடவில்லை.

**கேள்வி:-** உங்களை இன்று சந்தித்துவிட்டு நாளை பிரதமரைச் சந்திக்கவுள்ளார். நீங்கள் பிரதமரிடம் ஏதாவது கூறுமாறு கூறியிருக்கிறீர்களா?

நாங்கள் இப்போது மிகவும் நிதானமாக தென்னிலங்கை அரசியல் நிலைப்பாடு பற்றி அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். இன்று அங்கு ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டிகள் முடிவுக்கு வந்து அரசியலில் ஒரு உறுதிப்பாடு ஏற்பட்டு இந்தச் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கக் கூடிய சகல அதிகாரமும் பொருந்திய அரசியல் தலைமை உருவாகும் வரை நாங்கள் பொறுமையாக இருக்கிறோம் என்பதை அவரிடம் நாங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

ஆகவே, நாங்கள் அவர்களுக்கு செய்திகளை அனுப்ப வேண்டிய நிலைப்பாடு இல்லை. இன்று மாவீரர் நாள். எமது தேசியத் தலைவரது மிகவும் முக்கியமான கொள்கை விளக்க உரை இடம்பெற இருக்கின்றது. இந்த உரையில் எங்கள் நிலைப்பாடுகள் மிகவும் தெளிவாக முன்வைக்கப்படும்.

**கேள்வி:-** தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் பற்றி அந்தக் கொள்கை விளக்க உரை அமையுமா?

நிச்சயமாக இருக்கும். இன்றைய அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும், எதிர்கால அரசியல் செயற்பாடுகள் பற்றியதான விளக்கங்களை தலைவர் நிச்சயமாக முன்வைப்பார் என நான் நம்புகிறேன்.

**கேள்வி:-** மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பமாகினால் அது சனாதிபதி பிரதமர் ஆகிய இரு தரப்புடனும் கூட்டாக நடைபெறுமா? அல்லது ஏதாவது ஒரு தனித் தரப்புடன் மாத்திரம் நடைபெறுமா?

இதை முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு தென்னிலங்கையில் உள்ள அதிகார மையங்களிடமே உள்ளது. ஏனெனில் நாங்கள் எங்களது மக்களின் அபிலாசைகளுக்கு ஏற்ற வகையில் ஒரு தீர்வை எட்டுவதற்கு சரியான பலம்மிக்க அதிகாரம் உள்ள தலைமையை எதிர்பார்க்கின்றோம். அந்தத் தலைமை எப்படி உருவாகிறதோ அது அவர்களைப் பொறுத்தது.

**கேள்வி:-** மீண்டும் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக நீங்கள் அவர்களிடம் திட்டங்கள் ஏதாவது தெரிவித்தீர்களா?

அவர் சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை எம்மிடம் முன்வைத்தார். அவர்களது விருப்பம் யுத்தநிறுத்தம் செம்மையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும், பேச்சுக்கள் மீண்டும் தொடங்கப்பட வேண்டும் என்பதுமே அவர்களது எதிர்பார்ப்பாக இருக்கிறது. அவர்கள் அந்தக் கருத்தை சகல தரப்புடனும் பகிர்ந்து கொண்டனர். அந்த அடிப்படையில் எமது தேசியத் தலைவரைச் சந்தித்த போது அதனை முன்வைத்தார்.

**கேள்வி:-** வடக்கு கிழக்கு உதவிகள் தொடர்பாக அவர்கள் ஏதாவது தெரிவித்தார்களா?

வடக்கு கிழக்குப் புனரமைப்பு தொடர்பாக ஐரோப்பிய யூனியன் மிக மிக ஆர்வமாக இருக்கிறது. ஆனாலும் அதற்குரிய சூழல் அமையவில்லை என்பதே அவர்களது கவலைக்கு காரணமாக இருக்கிறது. அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தை மீளக் கட்டி எழுப்பி இந்த மக்களுக்கு ஒரு அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இவர்களது இந்த எதிர்பார்ப்பை தென்னிலங்கை அரசியல் சூழல் குழப்பித் தடுத்து நிறுத்தி யிருக்கிறது.

**கேள்வி:-** நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் சர்வதேச சமூகத்தின் அக்கறையைப் புலிகளிடம் வெளிப்படுத்தப் போவதாகக் கூறியிருந்தார். அவர் எப்படியான அக்கறையை உங்களிடம் தெரிவித்தார்?

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல சர்வதேச சமூகத்தின் அக்கறை மீண்டும் யுத்தம் ஏற்படக்கூடாது என்பதும், மீண்டும் வன்முறை நிகழக் கூடாது என்பதும் பேச்சுக்கள் மூலம் அமைதி வழியில் இன நெருக்கடிக்கு தீர்வு காணுகின்ற முயற்சிகள் தொடரப்பட வேண்டும் என்பதுதான் அவரது விருப்பமாக உள்ளது. ஆகவே அவர் அந்தக் கருத்தை எங்களிடம் தெளிவாக முன்வைத்தார். அதனை போது எங்களது தலைவர் மிகத் தெளிவாக விளங்கப்படுத்தினார். இது எங்களது கையில் இல்லை. தென்னிலங்கை அதிகார மையங்களின் கையில்தான் இது தங்கியிருக்கிறது. ஏனெனில் நாம் இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமான திட்டவரைவை நாங்கள் முன்வைத்திருக்கிறோம். நாங்கள் பேச்சுக்களுக்குத் தயார் எனவும் அறிவித்திருக்கிறோம். ஆகவே எங்களது தரப்பில் பிரச்சினைகள் எதுவும் இல்லை. அவர்களுக்கு எங்களது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

**கேள்வி:-** இந்தவகையில் தென்னிலங்கை கட்சிகள் மீது தாங்கள் அழுத்தங்கள் ஏதாவது பிரயோகிப்பதாகக் கூறியிருக்கிறாரா?

பொதுவாக அனைவரையும் அவர் சந்தித்துச் சர்வதேச சமூகத்தின் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்து வருகின்றார். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்கள் அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும் தெரிகிறது என்று நான் நினைக் கிறேன்.

**கேள்வி:-** தற்பொழுது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மையைத் தொடர்ந்து இந்தியா தனது இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருக்குமாறு பணித்துள்ளமை தொடர்பாகவும், சாத்தியமான இராணுவத் தலையீட்டிற்கு தயார் நிலையில் இருப்பதாக இந்திய இராணுவத் தளபதி கூறியிருப்பது பற்றி?

எங்கேயுமே கொள்கை வகுப்பை இராணுவம் முடிவெடுப்பதில்லை. கொள்கைகளை வகுத்து செயற்படுத்துவது அந்த அரசியல் தலைமைகள் தான். அரசியல் தலைமைகள் இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்ததாக எமக்கு உத்தியோக பூர்வமான அதிகார பூர்வமான எந்தத் தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. பத்திரிகைகள் ஊடாகவும் ஊடகங்கள் ஊடாகவும் தான் நாம் கேள்விப்பட்டோம். இராணுவத் தளபதி கூறிய செய்தியாகவே தான் நாம் கேள்விப்பட்டோம். ஆகவே அவர்கள் பல்வேறு நோக்கங்களுக்காக தங்களது இராணுவத்தைத் தயாராக வைத்திருக்கிறார்கள். அது அவர்களுடைய நாட்டின் உரிமை அவர்கள் இங்கு தலையீடு செய்யாத நிலையில் நாம் அதைப் பற்றி கருத்துக் கூற வேண்டிய தேவை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டன் தலைமையிலான குழுவினர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் கலந்துரையாடினர். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜெய் மகேஸ்வரன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கண்ணி வெடி அகற்றும் வேலைத்திட்டங்களைப் பார்வையிட்ட பின்னர் உலங்குவானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (சோ, லோ)

# சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பதில் இஸ்ரேல் அதிக ஆர்வத்தைக் காட்டவில்லை

## பலஸ்தீனத் தலைவர் குற்றச்சாட்டு

**அமெரிக்க ஆதரவுடனான மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து இஸ்ரேல் முழுமையான ஈடுபாட்டுடன் இல்லை என்று பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் குற்றம் சாட்டியுள்ளார்.**



அத்தோடு சமாதானத் திட்டம் தோல்வியடையும் பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இஸ்ரேல் தெரிவித்துள்ளவற்றையும் அவர் நிராகரித்துள்ளார்.

சமாதான நடவடிக்கை தோல்வியடைந்தால் சில இஸ்ரேலிய குடியேற்றங்களை அகற்றுவது என்றும் பின்னர் மேற்குக் கரையூடாக அமைக்கப்பட்டு வரும் பிரச்சினைக்குரிய பாதுகாப்புச் சுவரினை ஒட்டியதாக பலஸ்தீன தேசத்தின் எல்லைகளை அமைப்பது என்றும் இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் திட்டமிட்டிருப்பதாக இஸ்ரேலிய ஊடகம் அறிவித்துள்ளது.

இது குறித்து திங்கட்கிழமை ராய்ட்டருக்கு கருத்துத் தெரிவித்த அரபாத் ஷெரோனின் ஏதேச்சதிகாரமான திட்டத்தை நிராகரிப்பதாகத் தெரிவித்ததுடன் இது அவர்கள் சமாதானத்தை விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இது அமெரிக்க ஆதரவுடனான மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்திற்கு எதிரானது என சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை ஷெரோனின் இஸ்ரேலியக் குடியேற்றங்களை அகற்றுவது என்ற திட்டம் குறித்து அவரது வலதுசாரி லிக்குட் கட்சிக்குள்ளிருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. லிகுட் கட்சியில் பெரும்பாலானோர் இஸ்ரேலியக் குடியேற்ற நடவடிக்கைக்கு ஆதரவானவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேலியக் குடியேற்றங்களை அகற்றுவதை விடுத்து பலஸ்தீன ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என இஸ்ரேலிய அமைச்சர் யுசிலன் டோஷரோடைம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களைப் பலஸ்தீனர்கள் நிறுத்தினால் மட்டுமே அவர்கள் சுதந்திர பலஸ்தீனத்தை அடைய முடியும் என ஷெரோன் கூறியுள்ளார். அடுத்த வாரம் இஸ்ரேலியப் பிரதமர் பலஸ்தீனப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சில்வன் ஷலோம் தெரிவித்துள்ள போதும் இது குறித்து இன்னும் திகதி எதனையும் நிர்ணயிக்கவில்லையென பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரி தெரிவித்துள்ளார்.

## வெளியேற்றம்

ஈராக்கிலுள்ள 'கெயர்' அரச சார்பற்ற நிறுவனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைகுண்டுத் தாக்குதலையடுத்து கெயர் அலுவலக உத்தியோகத்தர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் கடந்த வெள்ளியன்று இந்தத்தாக்குதல் இடம்பெற்றது.



பௌத்த நாடாகிய தாய்லாந்தில் 5வீதமான முஸ்லிம்கள் நேற்று முன்தினம் ரமழான் திருநாளைக் கொண்டாடினர் இதன்போது பள்ளி வாசல் தொழுகையின் பின்னர் இரு சிறுமிகள் குதூகலத்துடன் காணப்படுகின்றனர்.

# அமெரிக்கா, பிரிட்டன் கொள்கைக்கு பாகிஸ்தான் பலத்த ஆட்சேபம்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க சனாதிபதி புஷ்சும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரும் கடந்த வாரம் லண்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாகிஸ்தான் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களுக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்துள்ளது.

காஷ்மீர்,பலஸ்தீனம், செச்சினியா ஆகிய நாடுகளில் பயங்கரவாதிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாடுகளின் நிலைமைகளை மோசமடையச் செய்வதாக பிளேயர் கூறியுள்ளார்.

இத்தகைய தகவல்கள் தவறானவையாகவும் ஆணவம் மிக்கவையாகவும் இருந்ததோடு பாகிஸ்தானிலும் காஷ்மீர் பிரதேசத்திலும் ஏனைய நாடுகளிலும் கோபமூட்டும் நிகழ்வாக இருந்துள்ளது என பாகிஸ்தான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத் பிரிட்டன் வெளியிட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பான கருத்துக்களையும் எதிர்பார்த்துள்ளது. எனவே பிரித்தானிய அரசு இந்தக் கருத்துக்களைத் தெளிவுபடுத்த வேண்டிய நிலைப்பாட்டிலுள்ளது.



ஜோர்ஜியாவில் பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த எட்வட் செவனாட்சே பதவி விலகியதையடுத்து மகிழ்ச்சியில் ஆடிப்பாடும் அந்நாட்டு மக்கள்.

## பன்னிருவருக்கு ஆயுள் தண்டனை

(புதுடில்லி)

கோத்ரா இனக்கலவரத்தைத் தொடர்ந்து அகமதாபாத்தின் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 14 பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குஜராத் நீதிமன்றம் 12 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. மேலும் 3 பேருக்கு இரண்டு ஆண்டு கால கடும் காவல் தண்டனை விதித்துள்ளது. அத்துடன் 48 பேர் இவ் வழக்கிலிருந்து விடுதலையாகியுள்ளனர்.

மாநிலத்தில் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்திற்குப் பின்னர் ஏற்பட்ட வன்முறை சம்பவங்களில் தண்டனை வழங்கப்படுவது இதுவே முதற்தடவையாகும். இவ் இனக் கலவரத்தில் சுமார் 1000 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த நிதியுதவி குறைப்பு மின்வேலி அமைப்பு காரணமாம்!

(வொஷிங்டன்)

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் பலஸ்தீனப் பிரதேசத்திற்கு ஊடாக மின் வேலியை இஸ்ரேல் தொடர்ந்தும் அமைத்து வருவதனால், இஸ்ரேலுக்கான அமெரிக்க உதவியில் 29 கோடி டொலர்கள் குறைக்கப்படுமென புஷ் நிர்வாகம் அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டிற்கான நிதி உதவியிலேயே இக் குறைப்பு ஏற்படும் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசா ரைஸ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-அமெரிக்க கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் ரைசும், இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோனின் ஆலோசகரும், வெள்ளை மாளிகையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். நேற்று முன்தினம் கலந்துரையாடல் முடிவடைந்த பின்னர் இஸ்ரேல் இந் நிதியுதவிக் குறைப்பை ஏற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துருக்கி குண்டுத் தாக்குதல்கள்; 9 சந்தேக நபர்கள் கைது!

## அல்-ஹைதாவுக்கு தொடர்பில்லை

(இஸ்தான்புல்)

துருக்கி தலைநகரில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 9 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூவர் வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்தும் ஏனையோர் வீடொன்றினுள் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் நடத்தப்படும் விசாரணைகள் மூலம் குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் எந்தத் தீவிரவாத அமைப்பு தொடர்புபட்டுள்ளது என்று தெரியவரும் என்று துருக்கி பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை இந்தக் குண்டுத் தாக்குதல்களுக்கும் அல்-ஹைதா இயக்கத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்று வெளியான செய்திகளை துருக்கி அரசு மறுத்துள்ளது.



இது நரியின் முகத்தையொத்த பறக்கும் நரியென அழைக்கப்படும் வெளவால் இனமாகும். இது ஆர்ஜென்டீனாவில் உள்ளது. பறக்கும் போது சிறகுகள் 200 செ.மீ நீளத்துக்கு விரிந்து காணப்படும்.

# இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் போர் நிறுத்தம் அமுலுக்கு வருகிறது!

## ஆக்கபூர்வமான முயற்சிக்குப் பாராட்டு

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் போர் நிறுத்தம் அமுல் செய்யப்பட்டுள்ளது. இரு தரப்பினரின் ஒத்துழைப்பிற்கமைய இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக போர் நிறுத்த அறிவிப்பை தன்னிச்சையாக பாகிஸ்தான் அறிவித்திருந்தமை தெரிந்ததே. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் இந்தப் போர் நிறுத்தத்திற்கு வரவேற்பு தெரிவித்துள்ளன.

இந்தியா -பாகிஸ்தான் உறவுகளின் ஆக்கபூர்வமான நிகழ்வுகள் குறித்து புஷ் நிர்வாகத்தின் பாராட்டை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சின்காவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே தகவல் தொடர்பை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் யோசனைக்கு பாகிஸ்தான் சாதகமாக செவிமடுத்துள்ளதென சின்கா பவலிடம் கூறியுள்ளார். ஆனால் எல்லை கடந்து ஊடுருவல் நிகழ்ந்தால் இந்தியா தகுந்த நடவடிக்கை எடுக்குமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# மாவீரர் நாள் –2003




## சரித்திர வீரர் கனவு பலிக்கும்

வெற்றியின் வித்துக்களே
பற்றியெரிந்த விடுதலைத்தீயாய்
செற்றாரின் செருக்கழித்த
கொற்றவையின் குழந்தைகளே

சுற்றத்தோடு உறவுகள் கூடியிங்கு
பற்றோடு நின்பதம் பணிந்தோம்
சற்றே விழி திறந்து
சாற்றுவதைக் கேட்டிடுவீர்

சுற்றி முளைத்த தடை அழியும்
முற்றம் சிரிக்கும் முரசொலிக்கும்
கத்தும் கடல் கைக்கெட்டும்
சரித்திர வீரர் உம் கனவு பலிக்கும்.

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

## தமிழீழ வைப்பகம்
## தமிழரின் காப்பகம்

(சி-8921)

# எமது காவிய நாயகர்களின் இலட்சியம் நிறைவேறும் நாள் வெகுதூரத்திலில்லை

## -மாவீரர் தின சிறப்பு நிகழ்வில் கேணல் சூசை

(அலுவலக செய்தியாளர்)

**எமது தாயக விடுதலைப் போராட்டத்தின் தாங்கு சக்திகளாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர்கள் மாவீரர்களே. இவ்வாறு நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையில், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், எமது விடுதலை இயக்கத்தின் புனித இலட்சியப் பாதையில் முதலாவதாக சங்கர் தன்னை வித்தாக்கிக் கொண்டான். அன்று தொடக்கம் இன்று வரையான அதேபாதையில் பதினேழாயிரத்துக்கும் அதிகமானவர்கள் மாவீரராகி எமது விடுதலைப் பயிருக்கு உரமாகி விட்டார்கள். இவர்களைப் பொறுத்தவரையில் தேசத்தின் விடுதலை,மக்கள் விடுதலை, மண்ணின் விடுதலை என்பவற்றை மிகவும் பற்றுறுதியுடன் பற்றிக்கொண்டு வெயில மழை பாராது, இரவு பகல் பாராது, ஊன் உறக்கம் பாராது, ஓய்வு ஒளிச்சல் எதுவும் இல்லாது மண்ணை ஆக்கிரமித்திருந்த எதிரியைத் தேடி அழித்து எமக்குப் பல வெற்றிகளை ஈட்டித்தந்து வீர காவியமாகி அந்த வெற்றிகளின் கதாநாயகர்களாக இன்று ஒளி வீசிக்கொண்டிருக்கிறார்கள்.

எமது தேசம் சுதந்திரம் அடையும் போது அந்த சுதந்திரத்தின் புருசர்களாக இவர்கள் தான் எமது மனங்களில் நிலைத் திருப்பார்கள். அவர்கள் காலத்தால் அழியாத காவிய நாயகர்கள். இவர்களது காவியங்கள் தான் இருபத்தைந்து ஆண்டுகளாக செங்குருதியால் எழுதப்பட்டு வருகிறது. இந்த இலட்சியப் பாதை நிறைவேறும் நாள் வெகுதூரத்திலில்லை.

இன்று உலகில் நடந்து கொண்டிருக்கின்ற விடுதலைப் போராட்டங்களில் சமர் தொடர்ந்துகொண்டிருக்கின்ற சமகாலத்தில் மாவீரர்களை நினைவு கூரும் ஒரு விடுதலை இயக்கம் எமது விடுதலை இயக்கம் மட்டும் தான். முதல் மாவீரன் சங்கர் பல வெற்றிச் சமர்களை நடத்தியவன். துணிவும், தந்திரமும் இவனிடம் இயல்பாகவே இருந்தது. இதனால் மிகவும் திறமையான தளபதியாக அந்த வீரனால் மிளிர முடிந்தது. இதனால் சங்கர் தலைவர் அவர்களின் மனதில் ஆழமான இடத்தைப் பெற முடிந்தது.

எமது தேசத்தின் வீரப்புதல்வர்களை மக்கள் பூசித்துக் கொள்ள முடியாதவாறு ஆக்கிரமிப்பு இராணுவம் அட்டூழியங்களைப் புரிந்து வருகிறது. இன்று போர் ஓய்ந்து சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ள போது ஐயாயிரத்தி இருநூறு கோடி ரூபா பாதுகாப்புச் செலவீனமாக ஒதுக்கப்பட்டுள்ளது. உலகமே இன்று சமாதானத்தை முன்னெடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்ற வேளையிலும் ஆட்சியாளர்கள் அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

இன்று இந்த மண்ணில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் பிறந்து இரண்டு ஆண்டுகள் தாண்டிவிட்டன. ஆனாலும் இன்னமும் யுத்தத்துக்கான ஏற்பாடுகள் நிறுத்தப்படவில்லை. அமைதியான முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த அமைதியான சூழலிலும் கடலில் எங்களது 26 போராளிகளை இழந்தபோதும் அமைதியைப் பேணி வருகிறோம். எம்மீது இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டு எமது போராளிகளை இழந்தும் நாம் பொறுமை காத்து நிற்பதன் மூலம் நாம் அமைதியைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் எவ்வளவு உறுதி கொணடிருக்கிறோம் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

எமது தலைவரின் காலத்தில் தான் எங்களது மாவீரர்களின் உறுதியான இலட்சியத்தை அடைய முடியும். தலைவருடைய மதிநுட்பத்தினால் தான் நாம் இன்று பெருவெற்றிகளைக் குவித்து வெற்றியின் விளிம்பில் நிற்கிறோம்.

இன்றைய காலம் மிகவும் நெருக்கடியாகவே கழிந்துகொண்டிருக்கிறது. எமது பலமே எம்மை இன்று பேச்சு மேசைக்குக் கொண்டு வந்திருக்கிறது. தமிழினத்துக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்றால், விடுதலைப் புலிகள் என்றுமே பலமாக இருக்க வேண்டும். புலிகளின் பலமே எமது இனத்துக்கான விடிவைப் பெற்றுத் தரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# பேருந்து விபத்து

(கொழும்பு)

இரத்தினபுரியிலிருந்து ரத்கஙா நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்து பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானதில் 22 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் திங்கள் இரவு இடம்பெற்றது.

# க.பொ.த (சா.த)மாணவருக்கு முன்னோடி வகுப்புக்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் உள்ள க.பொ.த.சாதாரணதரம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முன்னோடி வகுப்புக்கள் 22,23 ஆகிய இரு நாட்களும் இரண்டு இடங்களில் நடைபெற்றன.

மருதங்கேணி, உடுத்துறை மாணவர்களுக்கு மருதங்கேணி பாடசாலையிலும், ஆழியவளை வெற்றிலைக்கேணி மாணவர்களுக்கு ஆழியவளைப் பாடசாலையிலும் நடைபெற்றது. இவர்களுக்கான வகுப்புக்களை மானிப்பாய் லியோடக்கழகமும், வடமராட்சி கிழக்கு பட்டப்பிரிவு மாணவர் ஒன்றியமும் சேர்ந்து நடத்தியது. (11)

# சிறிலங்கா கடற்படைக்கு பிரான்ஸ் கடற்படை பயிற்சி

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடல்சார் நடவடிக்கைகளில் பயிற்சியளிப்பதற்கான நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரான்சிய கடற்படை அதிகாரி வைஸ் அட்மிரல் ரிச்சர்ட் வில்மொட் ரசல் என்பவர் கொழும்பு வருகை தந்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக இராணுவ உயரதிகாரிகளுக்கு பயிற்சியளிப்பதாகவும் பின்னர் ஏனைய வீரர்களுக்கும் இது தொடரும் எனவும் தெரிவித்துள்ளார். அவர் வருகைதந்துள்ள கடற்படைக்கப்பல் தற்போது கொழும்பில் நங்கூரமிட்டுள்ளது.

# ஒட்டுனுவின் இலங்கைக்கான வருகை மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறுவர்கள் நடவடிக்கை தொடர்பான ஐ.நா.விஷேட அறிக்கையாளர் ஒலாரா ஒட்டுனு இலங்கைக்கான தமது விஜயத்தை ஒத்திவைத்துள்ளார்.

அரசியல் குழப்ப நிலையால் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்திருக்கும் நிலையில் இலங்கை விஜயம் செய்வதில் அர்த்தமில்லை எனவும் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான பின்பே இலங்கை செல்லவுள்ளதாகவும் ஒட்டுனு கூறியுள்ளார்.

இவ்வருட முற்பகுதியில் ஒட்டுனு இலங்கை வரவிருந்த போதிலும், புலிகள் சமாதானப் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகிக்கொண்டதால் ஒட்டுனு தனது இலங்கை விஜயத்தை ஒத்தி வைத்துள்ளார்.

புலிகள் தங்கள் இடைக்கால யோசனையை சமர்ப்பித்துள்ளதையடுத்து ஒட்டுனு இலங்கை வருவது தொடர்பாக ஆலோசித்திருந்த போதிலும் இங்கு ஏற்பட்ட அரசியல்குழப்பநிலை தீர்ந்து சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பித்த பின்னரே இங்குவரவுள்ளதாகக் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவே: தவறவிடின் நாடு பிரிந்து போவதைத் தடுக்க முடியாது!

## -ஜோசப் பரராஜசிங்கம் பாராளுமன்றில் எச்சரிக்கை

இரு பிரதான கட்சிகளுக்கும் இடையிலான அதிகாரப் போட்டிக்கு முடிவு கண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன் வாருங்கள். இதுவே கடைசிச் சந்தர்ப்பம். இதனைத் தவற விட்டால் நாடு பிரிவதைத் தடுக்க முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் இதுபற்றிக் குறிப்பிடுகையில்,

இரு பிரதான கட்சிகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியே இனப்பிரச்சினைத் தீர்விற்குத் தொடர்ந்து தடையாக இருந்து வந்துள்ளது. உங்கள் மத்தியில் உள்ள அதிகாரப் போட்டிக்கும் ஒற்றுமையின்மைக்கும் முடிவு கண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன் வாருங்கள். இதுவே கடைசிச் சந்தர்ப்பம் ஆகும்.

சமாதானமா? அல்லது யுத்தமா? என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு தென் இலங்கை அரசியல் தலைமைகளினதும் தென் இலங்கை மக்களதும் கைகளில்தான் தங்கியுள்ளது. தென்னிலங்கைத் தலைமைகளும்,மக்களும் இவ்விடயத்தில் தவறான முடிவினை எடுத்தால் நாடு மீண்டும் யுத்த களமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜோசப் பரராஜசிங்கம் இவ்வாறு கூறியுள்ளார்.

# சர்வதேச ஊனமுற்றோர் தினம் கொண்டாடுவதற்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரால் சர்வதேச ஊனமுற்றோர் தினத்தினை கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதியன்று காலை 10.00மணிக்கு கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்க தலைமைச் செயலகத்தில் கொண்டாட்ட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

கிளி/கரைச்சி / கண்டாவளை / பூநகரி பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தலா ஒவ்வொரு ஊனமுற்ற ஆண், பெண்கள் வரவழைக்கப்பட்டு நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அன்றைய தினம் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதெனவும் இந்நிகழ்வில் சகலரையும் கலந்து பாராட்டுக்களையளித்து சிறப்பிக்குமவண்ணம் நிர்வாகத்தினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப்பயிற்சி உலக வங்கி உதவியுடன் சனவரியில் ஆரம்பம்

உலக வங்கியின் உதவியுடன் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்கும் திட்டம் சனவரி மாதம் முதல் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இந்தமுறை ஆரம்பமானவுடன் மேலும் 08 ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுக்கு இந்த முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் கூறியுள்ளது.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை ஆசிரியர்களுக்கென ஆங்கில மொழிப் பயிற்சிகள் தனித்தனியாக நடத்தப்படவுள்ளதாக பணிப்பாளர் நாயகம் குணவர்த்தன கூறியுள்ளார்.

ஆங்கில மொழிப்பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் ஆங்கிலத் தேர்ச்சி திறமை ஆசிரியர்களுக்கு அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் பயிற்சியின் போது விசேட கொடுப்பனவும் வழங்கப்படும் என்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு என்று 08 மாகாணங்களில் தனியாகப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## -கிளி.மக்கள் வங்கியில்-

# அடகு நகைகளை மீட்க காத்திருந்தோர் கவனத்திற்கு

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளையில் அடகு நகைகளை மீட்பதற்காக பணம் செலுத்தியவர்களின் நகைகள் வந்து சேர்ந்துள்ளமையால் அவற்றை வந்து பெற்றுக் கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி அடகு நகைகளை அலுவலக நேரத்தில் அடையாள அட்டை,பணம் கட்டியதற்கான பற்றுச் சீட்டுஎன்பவற்றுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.


எம் தேசத்தின் கட்டடங்கள்
நிமிர்ந்து நிற்பதற்கு உரமூட்டிய
காங்கேசன் சீமெந்தின்
கிளிநொச்சிக் கிளை அலுவலர்கள்
எம் தேசம் தலைநிமிர்ந்து நிற்பதற்காய்
தம் குருதியால்
உரமூட்டிய மாவீரர்களை வாழ்த்தி
வணங்குகின்றோம்.


காங்கேசன் சீமெந்து,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

(சி-8733)

## மணியோசை மௌனத்தில்...

கார்த்திகைக் காலம்.
காற்றின் கண்களிலும்
கண்ணீர் ஊறும்........
பூக்கள் மட்டும்
மாவீரருக்கு-தாம்
மாலையாகும் மகிழ்வில்
சிரிப்புத் தூவும்
கருவறையில் சுமந்து
கன்றுகளை
கல்லறையில் காணும்
நெஞ்சங்கள் வெடித்து
நெய்யுருக.....
விழிகள் விளக்காகும்
விளக்கேற்றும் நேரம்
விழிகளை திறவுங்கள்...என
விம்மல்கள் வெடிக்கும்
"மணியோசை மௌனத்தில்"
மனதோடு மட்டும்- எம்
மாணிக்கங்கள் பேசுவர்
கணவனின் கல்லறையை
கட்டியழும் அம்மாவை
ஆற்றுப்படுத்திய
மகனும்...... மகளும்....
நிமிரும் நிகழ்வு
இங்கு மட்டுமே நிகழும்...
எங்கள் உயிர்களை
உறங்க விட்டு....
கனக்கும் இதயத்துடன்
கால்கள் நடக்கும்....
நாளை முழுவதும் விடியும் என்ற
நம்பிக்கையில்...

அ.பிரியன்



## மா வீரர் தீப நேரம்

பொட்டுப்பொட்டாய் தாரகைகள்
நடுவில் தவழ்ந்து வரும் வெண்ணிலவு
சிறகசைக்கும் முகில் கூட்டம்.
தேசங் கடந்து செல்லும்
புள் இனங்கள் வியந்து போகும்
மா வீரர் நினைவு நாள்

சுழன்றடிக்கும் புயல்காற்றும்
ஆர்ப்பரிக்கும் கடலலையும்
தரித்து நிற்கும் ஒருபொழுது.
புவியிசை தமிழருக்கு-வீரம்
கருத்தரிக்கும் நேரமிது
மாவீரர் தீப நேரம்.

வானம் சிலிர்த்து நிற்கும்
வையகம் அமைதி கொள்ளும்
ஆலய மணிகளுக்குள்
மா வீரர் குரல் ஒலிக்கும்
கல்லறையில் தீபத்தில்
அவர்கள் தம் முகம் தெரியும்.

பூவாய் சொரிந்து மனம்
கண்ணீர் கசிந்துருகும்
தேசத்தின் உமக்கான பாடலில்
துயிலும் உம் நினைவு வரும்
ஒருதரம் உங்களின் திருமுகம்
காட்டியே மறுபடி உறங்குங்கள்.

வயலை.அ.யூலியஸ்

# தமிழினத்தின் விடிவெள்ளிகளுக்கு பாமாலை

## மாவீரருக்காக என் மணிவரிகள்

கல்லறைத்தொட்டிலில் கண்மூடித் துயிலுமெங்கள்
காவியக் குழந்தைகளோ-மன
உள்ளறை துறந்துங்கள் தொட்டிலைத் தொட்டொரு தாலாட்டுப் பாடி
பூவிதழ் தூவியுமைப் போற்ற வந்தோம் தமிழ்த் தேவர்களே!

புல்லரைக் கொன்றெமது விடுதலையை வென்றுவர-அண்ணன்
புலிப்படையில் இணைந்து போர்க்களம் சென்றவரே
மின்னலைப் போல உடலுயிர் வெறுத்து வெடிகுண்டாகியே-பகை
தெறிப்படைந்தோடப் படை வாசல் தேடி வென்றவரே.

விழி மூடிக் குழி தூங்கும் குட்டித் தெய்வங்களோ-எங்கள்
விழி கரைய குழி முன்னே மண்டியிட்டு - கண்ணீர்
துளி பாய்ச்சி பாவியராய்ப் பதறியழுகின்றோம்
வெளி நீட்டி முகம் காட்டி ஒரு முறைதான் பாருங்களேன்.

கார்த்திகைத் திங்களின் புனித இந்நாள் தனிலே
வேர்த்துருகும் எங்களின் விழி நீரை மலராக்கி
போர்ப்புலிகள் உங்களின் கல்லறைக்குக் காணிக்கை செய்து
நேர்த்தி கொள்ளடியார் போல் மண்டியிடுகின்றோம்.

உடும்பையூர்தனேஷ்

## தீக்குளித்தும் கருகாத பூக்கள்

தீக்குளித்தும் கருகாது
தீர்ப்பெழுதக் காத்திருக்கும்
விடுதலைப் பூக்களே!
விழித்திருப்பீர்-
என் விழியோரக் கசிவுகள் உம்மிடம்
ஏதோ வினவத் துடிக்கின்றன.
கல்லறை தழுவும் என் கரங்கள் கட்டிப்பிடித்து
முடியாதனவாய்
உம்மையே ஸ்பரிசிக்க விரும்புகின்றன.
கண்ணீரால் கழுவப்படுகின்ற உம்
கல்லறை தாங்கிய மலர்கள்
அஞ்சலி செலுத்த நாம்
அருகதையற்றவர்களென
நெஞ்சுக்குள் புழுங்கி
நெகிழ்ந்து போயின.
வீரர்களே!
விடுதலைப் பிரியர்களே!
வீரக் கொதிப்பேறிய குருதியில்
வேள்வித் தீ வளர்த்து
விண்ணையே வியர்க்க வைத்த
வித்தியாசமானவர்களே
விழி திறந்து பாருங்கள்.
வியர்த்துக் கொட்டுகிறது வானம்,
விடியும் நாளையும் தேசம்
உம் வேள்வித் விருந்தாக,
துயிலுமில்லங்களே சாட்சியாக
தமிழருக்குத் தூணி நாளை
தீர்ப்பெழுதப் போகிறது-அப்போ
புன்னகைக்கும் எம் தேசம் கண்டு
புல்லரித்துக் கொள்ளும் வானம்.

த.கு.லிங்கராஜா



## ஆணி வேர்கள்

நெஞ்சு கனக்கும் தாயக விடுதலைக் கனவை
தோளிற் சுமந்தவரே
குண்டு மழையினில் குளித்திடும் வேளையிலும்
கொண்ட கொள்கையில் குறி தவறா-நாயகரே
அண்ணன் காட்டிய திசையெங்கும் சென்று
அரக்கர்களை அழித்தவர்களே
ஈழ அன்னையின் விலங்குடைக்கும் வேள்வியில்-வீழ்ந்தவரே
ஈழ அன்னையின் கருவறையில் உறங்கும்-உத்தமர்களே.
செங்களம் நோக்கி சிரிப்புடன் சென்றவரே
எம் சிந்தையில் அகன்றிடா சிற்பங்களே
கொடும் பகை கண்டு அஞ்சாது போர் புரிந்த-நெஞ்சங்களே
உங்களுக்காய் தலை சாய்த்து வணங்கும்-இவ்
வேளைதனில் உறுதி எடுத்துக் கொள்கின்றோம்
நிம்மதி பெருமூச்சுடன் கல்லறையில் உறங்குங்கள்-எம் கண்மணிகளே.

ம.சுரேந்திரன்

# இன விடிவிற்கு முதல் வித்தானவன்

ஆயுதப் படைகள் வலை விரித்துத் தேடிய செ.சத்தியநாதன்

இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லா வீரன்: தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.

கண் திறக்காத பூனைக்குட்டியாக-நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்குத் தன்னை அர்ப்பணித்த வீரமறவன். அரச படையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில்-சுற்றி நின்று கொமாண்டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்த போது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப்பலியாகும் பெருமையை அணைத்துக் கொள்கிறான்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாதவன். ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடி குண்டுகளின் தயாரிப்புக்களிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரச படைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு மத்தியில் அவன் கிராமங்களின் வீதிகளில் சாதாரணமாக உலாவி வருவான். அதேநேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத்தவறும் கூட ஒரு கெரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில், சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்தி விட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளை பத்திரிகையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும் அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களை வைத்துக்கொண்டு அரச படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப்போராளி சரணடைவது கோழைத்தனமானது என்பது சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப் போராளிகளையும் ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரச படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.

படுகாயமுற்ற நிலையிலும் கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கெரில்லாப் பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கி தப்பிச் சென்றவன், பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்து விட்டோம் என்று தெரிந்த பின்தான் இடுப்பிலிருந்து ரிவோல்வரை எடுத்துக் கீழே வைக்கிறான். உயிரோடும், ஆயுதத்தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இருபத்தொரு வயதில் அவன சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கி விடமுடியும் என்று அன்றைய சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா சிறிலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது நெல்லியடியில் அரச படைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம், ஓயாது ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப்சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒருகையால் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்த ரிவோல்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவனதுசாதுரியம் அலாதியானது. நெல்லியடியில் அரச படையினர் பீதியுற்ற நிலையில் சங்கர் கால்களை அகல விரித்து பக்கவாட்டில் நின்று அரச படையினர் மீது குண்டுமாரிப் பொழிந்தான்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்குச் சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அற்புதமான சாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார் படுத்தப்பட்டிருந்த நிலையில் மாடிக்கட்டடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது, முன்பக்க வாயிலூக்கூடாக தாக்குதல் நடத்துவதென்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக்கடந்த காலத்துக்கு எழுதி வைத்துவிட்டு புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்து விட முடியும்? ஜீ.3துப்பாக்கி சகிதம் சங்கர் படுத்துக்கிடந்து, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடாத்திய தாக்குதல், அப்பகுதி அரச படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

எமது இயக்கத்தில் முதலாவது சாவை அணைத்துக் கொண்ட பெருமையுடன் துயில்கிறான். மேனாலை குண்டு வெடிப்பு நடவடிக்கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப் பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்கு சங்கரே பொறுப்பு வகிக்கிறான்.

எந்த விதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பல்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலை அடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய அவசரம் என்பவற்றிக்கு மத்தியில் மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களை பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்குத் தெரியாத விசயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகள் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தான்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர், இயக்கத்தில் தன்னையே கரைத்துக்கொண்டவன் விடுதலைப் போராட்டமே சங்கரின் முழு மூச்சாக இருந்தது.விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூக விரோத நடவடிக்கைகளையும், சந்தர்ப்பவாதிகளையும் அவன அறவே வெறுத்தான். அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதய சுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்கு சாட்சியாக நிற்கின்றார்கள்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் அரசியல் வழிகாட்டலிலும்,இராணுவ கட்டுக் கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவன். அவரின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற-தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளினால்தான் தலைமையேற்று நடத்தப்படவேண்டுமென்று, அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்தபோதெல்லாம், அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கின்றான்.

சாகும் தறுவாயிற் கூட அவன் தன்உற்றார், பெற்றாரை நினைக்கவில்லை. "தம்பி......... தம்பி"என்றுதான் அந்த வீரனின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும்,மற்ற இயக்கப் போராளிகளும் கண்கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனான்.

ஒரு உண்மை மனிதனின் கதை என்ற ரஷ்ய நாவலை கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர்,அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்கவில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதை,ஒரு வீர காவியம்தான்!



# சூரியப் பூக்கள்

ஈரவிழிகளை நெஞ்சில் சுமந்து
கையில் அர்ச்சனைப் பூக்களுடன்
எம் கவியப் புதல்வர்களிற்கு
காணிக்கையாக்கும்- என்
சூரியப் பூக்கள்-

சூரியனின் செந்தணலினை
கவியரங்கினால்........
வரம்பிடத் தான் முடியுமா?

வாழ்வின் வசந்தங்களிற்கு
நஞ்சூட்டி-எம்
தேசத்தை ஆக்கிரமித்து
அட்டகாசம் புரிந்து
சுடுகாடாக்கும் சூக்குமங்கள்
தான் எத்தனை?

அன்று கோப்பாய் வெளியில்
அரக்க களத்தை தீயிட்டாள் மாலதி
இன்று அண்ணனின் பாசறையில்
எத்தனை மாலதிகள்?

அரக்க இயந்திரங்கள்
மார்பைக் கிழித்து....
இரத்தம் சிந்தி.......
சிதைத்து சின்னாபின்னமாக்கி...
கொன்று குவித்து.....
கொட்டாவி விட்டது
ஆனால்- எங்கள்
மண்ணின் வீரமூச்சு ஓய்ந்திடவில்லை.

நெருப்பாறுகளைக் கடந்து....
வெட்டித் துளர்பாக்கி ....
சிறிப்பாய்ந்த சிறுத்தைகள்...
அனலென புயலாகி.....
எரிந்த எரிமலைகள்......

அக்கினிக் குழந்தைகள்
தலைவன் அவன் உதிரத்தில்
ஊறிக் கொண்ட துணிக்கைகள்.


விளைநிலம் எம்நிலம் செந்நிலம்
உறங்கும் விதைகளிற்கு
வழியிட்டது.........
அரக்க கூட்டம்
அரக்க இயந்திரமே!
உனக்கொரு விண்ணப்பம்!

அருமை பெருமை புரியாது
மாவீர மணிகளின் நெஞ்சில் மேல்
கதறக் கதற -உன்
இயந்திரத்தை ஏற்றினாய்....
கூலிப்படையே!
துயில்மையில் கூட- நீ
நிம்மதி குலைத்தாய்,
கல்லறைகளை பொறுக்கி
இதயம் கனக்க கண்ணாடியிட்டோம்,
பிணந்தின்னிப் பிசாசே!
உனக்கு எப்படிப் புரியும்
மாவீரர்களின் மாண்பு?

தாயகக் கனவுகளைச் சுமந்து,
விழிமூடிக் கண்ணயர்கின்றீர்களா?
உங்கள் கனவுகளுக்காய்..........
பொங்கு தமிழ்.....
கொண்டெழுந்தோம்....-உங்கள்
ஆயிரம் ஆயிரம் கதிர்கள்
எம் மண்ணின் கிருமிகளைக் கொல்லு
கனவுகளின் நம்பிக்கையுடன்....
என் சூரியப் பூக்களைத் தூவிக்
கொள்கின்றேன்.

மாழவள்

# எம்மனதில் மலர்ந்தீர்கள்



மாவீரரே...........
நீங்கள் மகத்தானவர்கள்
மண்ணில் வீசும் தென்றல் எல்லாம்
உமது சுவாசம்
விண்ணில் எரியும் மின்மினிகள்
உமது தோற்றம்
கண்ணில் தெரியும் ஒளிகளெல்லாம்
உமது முகம்
புத்தகம் படிக்கிறேன் நான்
புற் தரையில் நீர் படுத்ததனால்
நித்திரை செய்கின்றேன் நான்
நீர் அன்று விழித்ததனால்
சொத்துக்களைத் தேடுகிறேன் நான்
சொர்க்கமாய் சாவை நீர் நினைத்ததனால்
உறவுடன் கூடி வாழுகின்றேன் நான்
உம் உறவாய் தாய் மண்ணை நினைத்ததனால்
பூமியில் பதிக்கின்றேன் பாதம்
கசிகிறது குருதியின் வாசம்
காக்கி எறிந்த எம் இனத்தின்
கரங்கள் சற்றே உலர்கிறது

கால் கொலுசின் ஓசையல்ல.......
கயல் விழியின் பார்வையல்ல.......
கண்ணிமைக்கும் நேரமல்ல
எல்லாம் இங்கே வெடி ஓசை
கண்ணிமைத்தும் கண்விழித்தால்
புகை நடுவே புதரில் நானும்....
இவையெல்லாம் மறைந்து போக....
மறைந்தவர் நீங்கள் தானே... இல்லை
மறையவில்லை....
மலர்கின்றீர்கள் எம்மனதில் ரோஜாவாய்...

கய்.ஆசை

# மக்கள் பார்வைக்கு

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

**27-11-2003 ஆம் நாள் மட்டும் கீழ் குறிப்பிடப்படும் நேர ஒழுங்கில் பேருந்துப் பணி நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்குஅறியத் தருகின்றோம்.**

**1. முல்லைத்தீவு- முகமாலை**
- அ. முல்லைத்தீவு- முள்ளியவளை- முகமாலை ________ காலை 6.15
- ஆ. நாயாறு- செம்மலை- முகமாலை ________ காலை 7.45
- இ. முல்லைத்தீவு- முகமாலை ________ காலை 10.45
- ஈ.விரையுந்துப்பணி ________ பகல் 12.15

**2. முல்லைத்தீவு- புளியங்குளம்**
- அ. முல்லைத்தீவு- குமுழமுனை- புளியங்குளம் ________ காலை 4.30
- ஆ. முல்லைத்தீவு- சிலாவத்தை- புளியங்குளம் ________ காலை 9.00

**3. புதுக்குடியிருப்பு- புளியங்குளம்**
- அ. புதுக்குடியிருப்பு- நெடுங்கேணி- புளியங்குளம் ________ காலை 7.00
- ஆ. புதுக்குடியிருப்பு- மாங்குளம்- புளியங்குளம் ________ காலை 10.00

**4. புதுக்குடியிருப்பு- குமுழமுனை** ________ பகல் 2.30

**5. புதுக்குடியிருப்பு- கந்தபுரம் -மடு** ________ காலை 6.00

**6. புதுக்குடியிருப்பு- கோணாவில் -கந்தபுரம்** ________ மாலை 3.00

**7. புதுக்குடியிருப்பு- நெடுங்கேணி** ________ மாலை 4.00

**8. தேவிபுரம்- புளியங்குளம்** ________ காலை 5.30

**9. கிளிநொச்சி- முகமாலை** ________ காலை 8.00
________ காலை 9.00
________ காலை 10.00
________ பகல் 11.30
________ பகல் 12.30
________ பகல் 2.00

**10. கிளிநொச்சி- புளியங்குளம்** ________ காலை 10.00
பகல் 1.30

**11. துணுக்காய்- முல்லைத்தீவு** ________ காலை 6.30

**12. இராமநாதபுரம்- கந்தபுரம்** ________ காலை 7.00

**13. மல்லாவி- கோணாவில்- முகமாலை** ________ காலை 10.00

**14. நட்டாங்கண்டல்- முகமாலை** ________ காலை 6.00

**15. மல்லாவி- புளியங்குளம்** ________ காலை 8.00,
பகல் 12.00

**16. மல்லாவி- புதுக்குடியிருப்பு** ________ பகல் 1.00

**17. வெள்ளாங்குளம்- முகமாலை** ________ காலை 8.00
- அ. வெள்ளாங்குளம்- முகமாலை ________ காலை 10.00

**18.முழங்காவில்- புளியங்குளம்** ________ காலை 5.30

**19. முழங்காவில்- உயிலங்குளம்** ________ காலை 7.00

**நடுவப்பணிமனை,**
**தமிழீழ போக்குவரவுக் கழகம்.**

குறிப்பு- நேற்றைய நாளிதழில் வந்த இவ்வறிவித்தலில் தவறுதலாக [illegible]ஆம் மாதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(சி-8924)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12 - 07 - 1939

விண்ணில் 27 - 11 - 2002

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும்,
உருத்திர...ரத்தை வதிவிடமாகவும் கொண்ட
ஓய்வு பெற்ற பாண்டியன்குளம்
உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதம இலிகிதர்

அமரர்

## ஐயம்பிள்ளை இரத்தினம்
அவர்கள்

தோன்றாப் பரம்பொருள் தன்துணை கொண்டிந்தத் தொல்புவியிற் தோன்றி வளர்திருத் தொண்டுகள் செய்தெம் துயர் துடைத்து வான்றோயும் இன்பாரு மாதவத் தந்தையை வாழ்த்தியிந்தத் தேன்றோள் கவிமலர் சூட்டி வணங்கினம் சேவடிக்கு.

புல்லும் சிலும்பாது பூம்பாதம் தூக்கி வைத்து
மெல்ல நடந்து மேதினியை வலம் வந்து - நீர்
சொல்லும் பேச்சும், சிரிப்பும், கலகலப்பும் - அன்பின்
அரவணைப்பும் ஆறுதலும் ...
அல்லும் பகலும் அயராது எமக்களித்த
அர்ப்பணிப்பும் அழியாது நெஞ்சினிலே
சொல்லும் வகையின்றி சோக நினைவலைகளினால்
சோர்ந்து தவிக்கின்றோம்.

மண்ணின் விடிவிற்காய் எண்ணித் துணிந்து பல
கண்ணியமாய் கடமைகளை அயராது தந்திங்கே
மண்ணிற்காய் முதல் மகனை மாவீரனாய் ஈய்ந்து
விண்ணிற்கும் நீர் விரைந்தீர் மாவீரர் நாளினிலே
கண்ணும் நீர்சொரியும் கரங்களதும் பூச்சொரியும்
எண்ணி விளக்கேற்றும் இந்நாளும் உம்நாளே.

112, கந்தபுரம்,
கிளிநொச்சி.

அன்பு
மனைவி, மக்கள் ,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(3358)

# நெஞ்சகலா 7ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 26 - 10 - 1978

தாயக மண்ணில் 27 - 11 - 1997

## கப்டன் உயிரவன் (சிறுவன்)

[யாழ் செல்லும் படையணி]

### செல்வநாயகம் தவனேசன்

மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

நினைவுகளில் உன்பிரிவு கனவாக நிஜமாக
என்றும் உள்ளத்தில் வாழ்கின்ற அன்பிற்கு
எடுத்துக்காட்டாக வாழ்ந்த மகனே! நீ எங்கே?
கோப்பாயில் மண்ணின் மறவருக்கு விளக்கேற்றி
அன்றே மாவீரர் ஆனவனே
என்று வருவாயப்பா எம்மருகே இன்றும்
உன்குழந்தை முகம் நின்றொளிர்கின்றதோ
நாங்கள் கன்றிழந்த பசுபோல் தவிக்கின்றோமையா.

இவருடன் வீரச்சாவடைந்த மேஜர் ராவணன் (ரஜீவன்), 1ஆம் லெப். காந்திமதி, மேஜர் ஈழமணி மற்றும் அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

என்றும் உன்நினைவுடன்
அன்பு அப்பா, அம்மா, ஆசைத்தம்பி,
அக்காமார், அத்தான்மார், மருமக்கள்.

தகவல்:
செ.பாலன்
(சகோதரன் பிரான்ஸ்)

(சி-8732)

## ஒப்படைக்க வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படையினர் தம் பாவனையில் வைத்துள்ள தம்மீன் பிடிப்படகுகளை மீளப் பெற்றுத்தருமாறு காரைநகர் சாம்பலோடை பிரதேச மீனவர்கள் யாழ்.மாவட்டக் கடற்படைத்தளபதி லெப். கேணல் ரட்ணாயக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1991ஆம் ஆண்டு காரைநகர் பகுதிகளை படையினர் ஆக்கிரமித்தபோது இடம் பெயர்ந்த காரைநகர் சாம்பலோடைப் பிரதேச மக்கள் விட்டுச் சென்ற 20 இற்கும் மேற்பட்ட மீன்பிடிப்படகுகளை தம்பாவனையில் வைத்திருக்கும் படையினர், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் அப்பகுதிகளில் மீளக்குடியேறிய மீனவர்களிடம் அவர்களின் படகுகளை ஒப்படைக்காததைத் தொடர்ந்தே தமது கடற்றொழில் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு அவற்றை மீள தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

நீதியரசர் சிரானிதிலகவர்த்தன உயர் நீதிமன்ற நீதிபதியாக சனாதிபதி முன்னிலையில் நேற்றுமுன் தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீதியரசர் உடலகம மே ன் முறையீட்டுநீதிமன்றத்தலைவராக சனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

## கடன் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிக்கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் குடும்பத்தலைவர்களை இழந்த 25பெண்களுக்கு சுழற்சி முறைக் கடனாக தலா 15,000 ரூபாவினை வழங்கியுள்ளது.இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (11)

## கொழும்பில் திடீர் ஒத்திகை மக்களிடையே பதற்றம்!

(கொழும்பு)

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் தீயணைப்புப் படையினர் திடீர் ஒத்திகை நடவடிக்கையொன்றில் ஈடுபட்டனர்.

முன் அறிவித்தல் இன்றி நடத்தப்பட்ட இந்த ஒத்திகை நடவடிக்கையினால் அப் பகுதியில் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டன.

இதேவேளை, அவ்வழியால் வந்த வாகனங்களும்,மக்களும் உண்மைநிலை தெரியாமல் அப்பகுதியை விட்டு அகன்று சென்றனர்.

ஹோட்டல் நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் கொழும்பு மாநகர சபைத் தீயணைக்கும் படைப் பிரிவே தீயணைக்கும் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டது.

திடீரென்று தீப்பற்றிகொள்ளும் போது மேற் கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் தீயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுமே இந்த ஒத்திகையில் செய்து காட்டப்பட்டன.


# விநாயகா ரேட் சென்ரர்

எங்களிடம் மலிவான விலையில் தரமான அலுமினிய கலர் / கறுப்பு/வெள்ளை பார்வகை,ஒட்டுப் பலகை, MDF போட், PVC வெள்ளை போட், சிப்போட்,எம்போஸ் சீட், தரை விரிப்புக்கள், ரெக்சின் வகை,வெல்வெட் துணிபிளைவுட் கதவுகள், போமிக்கா சீட்,குசன் செற்றிகள், அனைத்து வகையான கைப்பிடிகள், பூட்டுகள், VHF,UHF CELTAL ANTNA செய்யத் தேவையான பொருட்கள், சகல விதமான கண்ணாடி வகைகள், மெகி போட், நோட்டீஸ் போட், கூலின் ஸ்ரிக்கர் வகைகள்,சகல விதமான அலுமினிய பிட்டிங் வேலைகள்என்பவற்றிற்கு,

நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

விநாயகா ரேட் சென்ரர்

இல. 102, முதல் மாடி,
பஸ் நிலைய கட்டடம்,
வவுனியா.

T.P.071-2355563

(சி-8725)


# ஆறாம் ஆண்டு நீங்காத நினைவில்



மண்ணில் 17 - 11 - 1970

மண்ணுக்காய் 27 - 11 - 1997

## மேஜர் இராவணன்/ரஜீவன்

### மகாதேவன் உமாசங்கர்
சுழிபுரம்

மாற்றான் படை வந்து கோப்பாயில் குடியேறி
மாவீரர் துயிலும் இல்லம் மதியாமல் மிதித்தழித்து
விடமாட்டோம் சுடரேற்ற இங்கென்று சொன்ன
கதைகேட்டு கனன்றெழுந்து கடிதேகி
தோழருடன் தோழருக்கு மண் சூட்டி சுடரேற்றி
துணிவுடனே தலைவன் உரையும் பரப்பி
மீண்டு வரும் வேளையினில் கோழையவன்
மாதா கோவிலடியில் மறைந்திருந்து தாக்கி
மாவீரனாகி இன்றுடன் ஆண்டாறு சென்றதையா
அந்நிலை மாறியின்று சமாதானம் என்று சொல்லி
சதுரங்கம் ஆடினாலும் உன் கனவு
நனவாகும் நாள் வெகுதொலைவில் இல்லையென்று விளக்கேற்றி
வணங்குகிறோம் விழிகளில் நீர் சொரிய.

உன் நினைவில் என்றும்
அப்பா, அம்மா, அக்காமார்,
தம்பிமார், அத்தான்மார், மருமக்கள்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவெய்திய உதிரவனையும், ஏனையோரையும் நினைவு கூருகின்றோம்.

(3900)

# முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் பின்வரும் இடங்களில் பின்வரும் திகதிகளில் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை சகலருக்கும் அறியத்தருகிறேன். அத்தினங்களில் சகலரும்தங்கள் தங்கள் வளர்ப்பு நாய்களை கட்டிவைக்குமாறும் எமது நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| | |
|---|---|
| 1.உருத்திரபுரம் சந்தை, கிளிநொச்சி. | 02.12.2003 |
| 2.வட்டக்கச்சி சந்தை, கிளிநொச்சி. | 03.12.2003 |
| 3.தருமபுரம், கிளிநொச்சி. | 04.12.2003 |
| 4.உதிரவேங்கை கோயிலடி, கிளிநொச்சி. | 06.12.2003 |
| 5.திருநகர் /உதயநகர், கிளிநொச்சி. | 08.12.2003 |

பொன். நித்தியானந்தம் [ஒப்பம்]
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி.

(சி-8731)

## வரி விளம்பரம்

**LOVE BIRDS**
**விற்பனைக்கு**

LOVE BIRDS குருவிகள் விற்பனையாகின்றன. இல.82, D.8, உருத்திரபுரம், கிளிநொச்சி.(3353)

**பல்கட்டும் நிலையம்**

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது. வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

## வி.ரி.எஸ்.மல்ரி சேவிஸ்
## V.T.S.MULTI SERVICE

இல.43,
புதிய பஸ்நிலைய கடைத் தொகுதி,
வவுனியா.

### எமது சேவைகள்

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகள்,
பைக்ஸ்,
போட்டோ கொப்பி,
லெமனத்திங்,
இன்ரனெற்,பணப்பரிமாற்றம்,
விமானப் பயண ஒழுங்குகள்,
காப்புறுதி ஆலோசனைகள்,
கணினி மூல தமிழ் ஆங்கில தட்டச்சு வேலைகள்

அத்துடன்

கட்டட நிர்மாண ஒப்பந்த வேலைகள்

T.P: 024-2221789, 024-2222622, 024-2222945
Fax:024-2222448,
Internet To.024-2221530. (சி-8725)


## தீபம் ஏற்றும் நேரம்

கார்த்திகை மாத மழை நீரே
எங்கள் குழந்தைகள் உறங்கும்
கல்லறைகளை நனைக்காதே!
தாயின் கருவில் இருக்கும் போது
தன் தாய்க்கு மட்டும் மகனானான்

தாயக மண்ணில் உறங்கையிலே
பல்லாயிரம் பேருக்கு மகனானான்
வித்தாகும் முன்னம் இவன் வீரக் குழந்தை
என நாம் அறியோம்
உலகெங்கும் இவனுறவுண்டு

வீசும் காற்றே விலகிச் செல்
ஆயிரமாயிரம் தீபங்கள் ஏற்றும் நேரம்
அணையாதிருக்க விலகிச் செல்
கல்லறையில் உறங்கும் மைந்தர்களை
உன் கரத்தால் நீ தழுவிச் செல்

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க
தன் சுதந்திர வாழ்வை இழந்தவர்களின்
உத்தமக் குழந்தைகளின் உறக்கத்தை
ஒரு போதும் கலைக்காதே

கார்த்திகை 27 இனில்
கல்லறை நோக்கிச் சென்று புரள்
கதறி அழும் அன்னையரும்
கண்ணீர் சிந்தும் உடன் பிறப்புகளும்

கார்த்திகை மாத மலரே எல்லாம் எங்கள்
செல்வங்கள் உறங்கும் கல்லறை மீதிருக்கும்
கண்மணிகள் மலரும் உங்களுக்கு கார்த்திகை
காவர்கள் அழியும் விளக்கிட்டும்

உங்கள் எண்ணம் நிறைவேறும்
நாள் இதோ! தெரியுது பாருங்கள்
ஆளுக்கு ஆள் தெற்கில் சண்டையடா
உங்கள் அண்ணன் கரம் ஓங்குது
உங்கள் எண்ணம் நிறைவேறுது
இது கனவல்ல நினைவிது

கார்த்திகை 27 நாளில் எங்கள்
காவல் தெய்வங்களின் பூசை நாள்
ஆலயமெங்கும் நாதஒலி கேட்கும்
வீதிகள் எங்கும் ஒளி வீசும்
மாவீரர் உறங்கும் கல்லறை யெங்கும்
முக்கள் வெள்ளம் சொரியும் பார்

பொழியும் மழையே ஓய்ந்து போ
தென்றல் காற்றே விலகிச் செல்.

ஆக்கம்
**முருகண்டி கரன்**
வர்த்தக சங்கம்

(3898)

பாராளுமன்ற ஒத்திவைப்பு குறித்து

# சர்வதேச அமைப்புக்களிடம் முறையிட ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்

சனாதிபதியினால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திற்கும் பொதுநலவாயநாடுகள் அமைப்பின் பொதுச் செயலகத்திற்கும் முறைப்பாடு செய்ய ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 130பேரின் கையெழுத்துக்கள் அடங்கிய ஆவணத்துடன் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் தொழில் வேலைவாய்ப்பு அமைச்சருமான மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட தினம் குறிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற அமர்வுகளைத் தள்ளி வைத்தமை பாராளுமன்ற சம்பிரதாயங்களைக் குழப்பும் நடவடிக்கை என்றும் அந்த முறைப்பாட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற பெரும்பான்மையுள்ள அரசாங்கத்திடம் கலந்துரையாடாமல் பாராளுமன்றத்தை தள்ளி வைத்தமை பாராளுமன்ற சுயாதீனத்திற்குப் பங்கம் விளைவிக்கும் செயலாகும்.

இதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இம்முறைப்பாட்டின் மூலம் ஒத்துழைப்புக் கோரியுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

## கூட்டணியை எதிர்ப்பேன்

-அனுரா

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணி, ஐ.தே. கட்சிகளிடையே ஏற்படும் எந்த ஒருகூட்டணி ஒப்பந்தத்தையும் தான் முழுமையாக எதிர்ப்பதாக அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகையொன்றிடம் கருத்துத்தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது, இந்தக் கூட்டணி இரு ஆண்களுக்கு இடையில் நடைபெறும் திருமணம் போன்றது எனக் கூறியதுடன் இதனை சிறில.சு.கட்சி உறுப்பினர் எவரும் விரும்ப வில்லை என்றும் கூறியுள்ளார்.

கொழும்பில் மட்டுமே இதற்கு ஓரளவு ஆதரவு இருப்பினும் பிற மாவட்டங்களிலும் கிராமங்களி லும் 80 வீதமானோர் இதனை எதிர்பார்ப்பதாகவும் அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

## வெற்றிடங்கள் நிரப்ப ஏற்பாடு

வடக்கு-கிழக்கிலுள்ள24கல்வி வலயங்களில் வெற்றிடமாக வுள்ள உதவிக்கல்விப் பணிப் பாளர்கள் பதவிகள் நிரப்பப்பட வுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மாகாணக்கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாகக் கூறியுள்ளது.

நேர்முகப் பரீட்சை மூலமே உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவிகள் நிரப்பப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு கூறியுள்ளது.

அதே நேரம் சேவைகாலம், தகைமைகள்,ஆளுமைகள், ஆசிரியதரம் என்பனவும் கருத்திற் கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்பு நடைபெறும் என்றும் மாகாண அமைச்சு கூறியுள்ளது.

வடக்குக் கிழக்கிலுள்ள 24 கல்விவலயங்களில் உதவிக்கல்விப் பணிப்பாளர் வெற்றிடங்கள் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

## சனாதிபதியின் அறிவிப்பு

ஊடகத்துறைக்கான தேசிய கொள்கை ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. இதன்படி இதனைத் தயாரிப்பதற்கும், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஊடகத்துறை சிரேஷ்ட நிலை உறுப்பினர்கள் ஆகியோர் நியமிக்கவுள்ளனர். இதேவேளை, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை மக்கள் முன் வெளிப்படுத்த அரச வானொலி மூலம் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளவிரும்பும் கட்சிகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு சனாதிபதிச்செயலகம் அறிவித்துள்ளது. (32)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக் மண்ணில் |
|---|---|---|
| 1969 - 06 - 04 |  | 1996 - 11 - 27 |

### கப்டன் கபில் (வர்னன்)
### செல்வநாயகம் அருட்செல்வம்

பிள்ளையார் கோவில் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

தாய்வீடு துறந்து தலைவனின் தானையில்
தாயகத்தை மீட்டிடவே தானாக இணைந்த வீரனே
தாய் மண்ணில் தனைக் காணாது
தாய் தந்தையொடு நாமும் ஏங்கிநிற்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**தாய்,தந்தையர்,**
**உற்றார்,உறவினர், தம்பிகுடும்பம்.**

(3899)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 19 □ 02 □ 1944 |  | 29 □ 10 □ 2003 |

### அமரர்
### திருமதி நுமணி சோதிராசா

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே
காலத்தால் நாம் உம்மைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சை விட்டு ஒரு போதும் அழியாது.

28.11.2003 நாளை எமது இல்லத்தில் நடைபெறும் எங்கள் அன்புத் தாயாரின் 31ஆம் நாள் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-
**இல.63,கொல்லவிளாங்குளம்,**
**வவுனிக்குளம்.**

தகவல்:-
மகன்
சோ.சுதன்

(3363)



### சிந்தனைக்கு

இரும்பை ஒத்த இலட்சிய உறுதியுடனும் எதையும் தாங்கும் இதயத்துடனும் சாவுக்கு அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் போராடினார்கள். போராட்டத்தில் வீர மரணத்தைத் தழுவினார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-11-2003

## தமிழர்களின் வாழ்விற்காய்...!

நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் போரில் வித்தாகிய மாவீரர்களின் நினைவு நாள். முதல் மாவீரன் லெப். சங்கரின் நினைவுநாள்.

மாவீரர் மாதம் – அதாவது நவம்பர் மாதத்தில் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு எப்பொழுதுமே அச்சமும் பீதியும் கொண்டதாகவே இருப்பதுண்டு. விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்காத காலப் பகுதியில் எப்பொழுதுமே இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்படுவதுண்டு, ஆயினும் சிறிலங்கா இராணுவம் தனது பெரும் தோல்விகள் பலவற்றை இம்மாவீரர் மாதத்திலேயே சந்தித்ததுண்டு.

ஆனால் யுத்த நிறுத்த உடன்பாட்டை விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் இக்காலப் பகுதியில், மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகளுக்கு படைத்தரப்பு போடமுனையும் முட்டுக்கட்டையானது, அவர்களின் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாட்டையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அவ்வாறு இல்லாதுவிட்டால் மாவீரர்களை நினைவு கூரும் இந் நிகழ்விற்கு முட்டுக்கட்டை போட அவர்கள் முற்பட மாட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கென இதுவரை 17700 வரையிலான போராளிகள் தமது இன்னுயிரை ஈந்துள்ளனர். இவர்களின் தியாகம், அர்ப்பணிப்பு, ஈகம் என்பன பல வடிவத்திலானவை. ஆனால் அவற்றின் நோக்கங்கள் யாவும் ஒன்றே ஆகும். அதாவது தமிழ் மக்களின் சுதந்திரமானதும், பாதுகாப்பானதுமான வாழ்வு உறுதி செய்யப்படுதல் என்பதே அதுவாகும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை 'பேய்களுடனும்,' 'பிசாசுகளுடனும்' கூட்டுச் சேர்ந்து அடக்கி ஒடுக்கவும் அழித்து விடவும், வெறிபிடித்த சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்ட ஒடுக்குமுறைகளையும் மீறியதாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை உலகின் கவனத்திற்கு கொண்டுவந்தவர்கள் இம மாவீரர்களே ஆகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்குப் பயங்கரவாதம் என்ற முத்திரையைக் குத்த முனைந்ததோடு அதனை ஒடுக்குவதற்கெனச் சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக்கொண்டனர். மறுவளமாகக் கிடைக்கப் பெற்ற உதவிகளைக் கொண்டு தமிழ் மக்கள் மீது அரசு பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

ஆனால் போராளிகள் செய்த அர்ப்பணிப்புகளும், தியாகங்களும் விடுதலைப் போராட்டத்தை யார் அங்கீகரித்தார்களோ இல்லையோ, தமிழ்மக்கள் மீதான இராணுவ ஒடுக்கு முறைக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்பதை எவருமே புரிந்து கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கியது. இந்நிலையில் தான் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வொன்று காணப்படுவதற்கு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை அவசியம் என்ற நிலை தவிர்க்க முடியாததொன்றாகியது.

இன்று தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது சர்வதேச பரிமாணம் என்றதொன்றாக–உலக வல்லரசுகளினதும், பிராந்திய வல்லரசுகளினதும் கவனத்தை ஈர்க்கும் இப்பிராந்தியத்தின் முக்கிய விவகாரங்களில் ஒன்றாக வளர்ச்சி கண்டுள்ளது. இன்று இப்பிராந்தியத்தின் எதிர்கால அரசியல், இராணுவ தந்திரோபாயத்தை வகுக்கும் எவரும் புறந்தள்ளிவிட முடியாததொன்றாகவும் இப்பிரச்சினை வளர்ச்சி கண்டுள்ளது.

இந்நிலையானது, தமிழ் மக்களின் துன்பதுயரங்கள் –அவர்கள் அனுபவித்த நெருக்கடிகள் என்பவற்றைக் கண்டு கொண்டதினாலோ அன்றி மனித உரிமைகள், சனநாயக உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதினாலேயோ அன்றி சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் சிறிலங்கா இராணுவ அடக்குமுறையினால் பெரும் அவலத்திற்கு உள்ளாகியுள்ளனர் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதினாலோ அல்லது தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளது, அவர்களின் வாழ்வுரிமை மறுக்கப்படுகின்றது, என்பதினாலோ, எவராலும் வழங்கப்பட்டவையோ, அங்கீகரிக்கப்பட்டவையோ அல்ல.

இவை தமது மக்களின் துயர் துடைக்க தம் உயிர்களை ஈகம் செய்து மாவீரர்கள் பெற்றுக்கொடுத்தவையாகும். இவர்களின் அர்ப்பணிப்பும், தியாகமுமே உலகத்தவர்களை எம்பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்தது. தமது விருப்பிற்கும், இஸ்டத்திற்கும் ஏற்ப செயற்படுதல் சாத்தியமாக மாட்டாது என்பதையும் அவர்களுக்கு உணர்த்தியது. இந்த வகையில் தமிழ் மக்களின் சுதந்திரமானதும், பாதுகாப்பிற்குமான வாழ்விற்காகத் தம்முயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவிற் கொள்ளுதலும் போற்றுதலும் தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். அவர்களின் தியாகமே தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வாகியுள்ளது.

## தமிழீழ மாவீரர் நாள்-2003

# நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்

தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் நினைவுரை, இன்று மாலை 6.05 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக் கூடியதாக தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிகழ்வு இடம் பெறும்

**நினைவொலி எழுப்புதல் (6.05 மணி)**

தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன் உடனடியாக 6.5 மணிக்கு அனைத்து வழிபாட்டு இடங்களிலும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப் பப்படும். உயிர்காப்புப் பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்தி களும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி)**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்ட வுடன் 6.6மணிக்கு மாவீரர்களுக்கான ஒருமணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும் அந் நேரம் இல்லங் களிலும் ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்தவேண்டும்.

**ஈகச்சுடரேற்றல் (6.07 மணி)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.7 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும். (மாவீரர்களின் பெற்றோர் கள் அவரவர் சுடரேற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால் மாலை 5.45 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட் டிருக்கும்)

மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள மாவீரர் கல்லறைகள், நினை வுக்கற்களுக்கு முன்னால் மாவீரரின் பெற்றோர் குடும்பத்தினர் அதே நேரம் மாவீரர் துயிலும் இல்லங் களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற் றோர்கள் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்க ளுக்கு வராத பொது மக்கள் தமது இல்லங்கள் பொது இடங்கள் அலு வலகங்கள், விளையாட்டு இடங்கள் தொழிற்சாலை போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடரேற்றுவர். ஈகச்சுடர் ஏற்றும் போது மாவீரர் பாடல் ஒலிக்கப் படும்.(மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப் படல் வேண்டும்)

தமிழீழ மாவீரர் பணிமனை

# முல்லை. மாவீரர் பெற்றோர் கௌரவிப்பில் தளபதிகள் சூசை,பால்ராஜ் கலந்து சிறப்பிப்பு

முல்லை மாவட்டத்தில் கடற் புலிகளின் பிரதேசத்திற்குட்பட்ட மாத்தளன் தொடக்கம் நாயாறு வரையான மாவீரர்களின் பெற்றோர் கடந்த 24ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் காலை 11.00 மணிக்கு கௌரவிக்கப்பட்டனர். இந்த வைபவத்தில் பொதுச் சுடரினை இப்பாடசாலையின் உப அதிபர் குணநேசன் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை முல்லைத் தீவுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுட ரினை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். இத னையடுத்து பெற்றோர்களுடனான கலந்துரையாடலில் மணலாறு கட்டளைப் பணிகத் தளபதி கேணல் பால்ராஜ் மற்றும் கடற் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் கலந்து சிறப் பித்தனர். மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வு 25ஆம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடற்புலிக ளின் மகளிர் படையின் பாண்ட்வாத் தியம் முழங்க நிகழ்வு காலை 8.00 மணிக்கு ஆரம்பமானது. இதில் பொதுச்சுடரினை இப்பாடசாலையின் உப அதிபர் ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை கேணல் சூசை ஏற்றி வைத்தார். தொடர்ந்து திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை அசோக், சின்னஅசோக், அசோகா ஆகிய மூன்று மாவீரர்களின் தந்தையார் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் பெருமளவான மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் இரவு கலை நிகழ்வு களும் இடம்பெற்றன.

இரண்டாம் நாள் எழுச்சி நிகழ்வுகாலை 8.00மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியால யத்தில் கடற்புலிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரத்தியேகமான மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்ட நினைவாலயத்தில் ஆரம்பமானது. பொது ஈகச்சுடரினை முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை முல்லை. மாவட்ட வைத்திய அதி காரி தர்மேந்திரா ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான ஈகச்சுடரினை முல்லை கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஏற்றினார். இந்நிகழ்வில் மாண வர்கள், மக்கள், போராளிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நெடுங்கேணிப்பிரதேசத்தில் கடந்த 24ஆம் திகதி சிறிகதிர் வேலாயுதப் பெருமாள் ஆலயத்தில் இருந்து நெடுங்கேணி மகாவித்தியா லயத்தின் மாணவிகள் பாண்ட் வாத்திய இசையுடன் பெற்றோர்கள் நெடுங்கேணி மகாவித்தியாலயத் திற்கு அழைத்துவரப்பட்டனர். வவுனியா வடக்குப் பிரதேச மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில் நிகழ் வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுட ரினை வவுனியா மாவட்ட மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் ஆனந்தன் ஏற்றினார். தொடர்ந்து நெடுங்கேணி மகாவித்தி யாலய மாணவியின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து கருத்துரை களை தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

மாங்குளம் பிரதேசத்தில் 25ஆம் திகதி காலை10.30 மணியளவில் மாங்குளம் காவல்துறையின் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் காவல்துறையினரின் பாண்ட் வாத்திய இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சின்னண்ணன் தலைமையில் பொதுச் சுடரினை முல்லை. மாவட்ட மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப் பாளர் பாண்டியன் ஏற்றிவைக்க பொது ஈகச்சுடரினை காவல்துறை பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் அவைக்குமரன் ஏற்றினார். கருத்து ரைகளை சோதியா படையணிப் போராளி மாவீரர் காந்தனின் தந்தை, தமிழீழ ஊரக வளர்ச்சித் திட்டப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தி னர். (05, 20)

### விசேட...

தீவு - புளியங்குளம், புதுக்குடி யிருப்பு- புளியங்குளம், புதுக்குடி யிருப்பு - குமுழமுனை, புதுக்குடி ருப்பு- மடு, புதுக்குடியிருப்பு-கந்த புரம், புதுக்குடியிருப்பு- நெடுங்கேணி, தேவிபுரம்- புளியங்குளம், கிளி நொச்சி - முகமாலை, கிளிநொச்சி - புளியங்குளம், துணுக்காய்- முல்லைத்தீவு, இராமநாதபுரம் - கந்தபுரம் ஆகிய பாதைகளில் இவ்விசேட சேவை நடைபெறுகிறது. இதற்குரிய மேலதிக விபரங்கள் உட்பக்கத்தில் வெளியிடப்பட்டுள் ளது.

### தேசியத்...

அலுவலகங்கள், விளையாட்டு இடங் கள், தொழிற்சாலைகள் ஆகிய இடங்களில் ஈகச்சுடர் ஏற்றப்படும். தமிழீழ மாவீரர் நாளை உணர் வெழுச்சியுடன் அனுஷ்டிக்க தமிழ் மக்கள் அனைவரும் தயார் நிலை யில் உள்ளனர். இன்றைய மேற்படி நிகழ்வுகளில் பெரும்பாலான மக்கள் கலந்து கொண்டு மாவீரர்களை நினைவு கூரவுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களிலுள்ள மக்களும் மாவீரர் தினத்தை எழுச் சியுடன் அனுஷ்டிக்கின்றனர். அப் பகுதி களிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் இதற்கென தயார்ப்படுத் தப்பட்டுள்ளன.

# சமாதானத்தை அடைய இருதரப்புக்கும் தியாகசிந்தை அவசியம்

## -கிறிஸ்பெட்டன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் அனைத்து சமூகங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் த.வி.புலிகளும் தென்னி லங்கை அரசியல்வாதிகளும் தியாக சிந்தையுடன் செயற்படவேண்டியது அவசியமாகும் என இலங்கைக்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றி யத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டன் தெரி வித்துள்ளார்.

தலைவர் பிரபாகரனுடன் பேசிக் கொண்ட விடயங்கள் எல்லாவற்றை யும் கூறமுடியாது. அவற்றை ஊடகங் கள் திரிவுபடுத்தி நெருக்கடியை ஏற்படுத்திவிடக்கூடும். இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளில் தலை யிடுவதை ஐரோப்பிய ஒன்றியம் விரும்ப வில்லை. கிறிஸ்பெட்டன் நாளை ஐரோப்பிய மாநாட்டிற்காகப் புது டில்லி செல்கிறார். அதேவேளை இந் தியா, பிரிட்டன், நோர்வே ஆகிய நாட் டுத்தூதுவர்களுடன் பேச்சு நடத் தியபொழுது, சமாதானத் தொடர் பில் ஒருமித்த கருத்தைக் கொண்டி ருப்பதாகத் தெரிவித்தார்.

# நாகர்கோவிலில் நீரில் மூழ்கி 10 இராணுவத்தினர் மரணம்

நாகர்கோவிலுக்கும் எழுதுமட்டு வாளுக்கு மிடைப்பட்ட பிரதேசத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரில் பத்துப் பேர் நேற்று மாலை நீரில் மூழ்கி மரண மடைந்துள்ளனர்.

பயிற்சியின்போது முதலில் மூன்று இராணுவத்தினர் காணாமற் போயினர். இதனையடுத்து இவர் களைத் தேடிச் சென்ற ஏழு இராணு வத்தினரும் குறிப்பிட்ட பகுதியில் காணாமற்போயினர்.இதனைத் தொடர் ந்து அப் பகுதிக்குச் சென்ற படை யினர் பத்து படையினரதும் சடலங் களையும் நீரிலிருந்து மீட்டுள்ளனர்.

### வீரவணக்கம்...


(துரைராசா சுரேந்திரன்-2ஆம் வட் டாரம் கருவங்கேணி, மட்டக் களப்பு) என்ற போராளியே சாவடைந்த வராவார். இவருக்கு தமிழீழ விடு தலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்து கின்றனர்.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.